மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்ட முன்வடிவு, பிரிவு வாரியாக, ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவு 2, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறைவேற்றப் படவேண்டும்"

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : அவையின் முன் உள்ள பிரச்சினை

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்சவரம்பு கட்டுதல்) மூன்றும் திருத்தச் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 17/1974) நிறைவேற்றப்பட வேண்டும்".

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

(2) தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவரவர்களே,

 தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா] [1974 ஏப்ரல் 11

" சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு @ (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் "
என்று முன்மொழிகிறேன்.

விற்பனை வரி சீரமைப்பில் முக்கியமான அம்சம் வரையறுத்துள்ள விற்பனையின் அளவு ரூ. 25,000 லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தப்பட்டதாகும். இந்த வரம்பு வரை, விற்பனையின் அளவுள்ள வியாபாரிகளுக்கு வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இதனை வர்த்தக சமுதாயமும், சிறு வியாபாரிகளும், பொது மக்களும் வரவேற்றுர்கள். இதனால் 40,000 சிறு கடை வியாபாரிகள் பயனடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இரண்டு கோடி ரூபாய்க்கு மேற்பட்ட இழப்பு ஏற்படும். அதை ஈடு கட்டுவதற்கும், நிதி வசதியைப் பெருக்குவதற்கும் ஏற்ற வகையில் ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேல் மொத்த வியாபாரத் தொகையை உடைய வணிகர்களால் தமிழ்நாடு 1959-ம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 1/1959) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத்தக்க கூடுதல் விற்பனை வரி வீதத்தை 1974-75-ஆம் வரி விதிப்பு ஆண்டு முதற்கொண்டு 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்தது.

இறக்குமதியாளர் ஒருவரால் அல்லது மொத்த விற்பனை வணிகர் ஒருவரால் தமிழ்நாடு 1939-ஆம் ஆண்டு மோட்டார் எண்ணெய் விற்பனை வரி விதிப்புச் சட்டத்தின் கீழ் (தமிழ்நாடு சட்டம் 6/1939) செலுத்தத்தக்க வரி மீது விதிக்கத் தக்க கூடுதல் விற்பனை வரி வீதத்தையும் 1974-75 வரி விதிப்பு ஆண்டிலிருந்து 5 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது.

மேற்சொன்ன செயற்குறிப்புகளுக்குச் செயல் வடிவம் கொடுப்பதற்காக தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட வரைவு (சட்டப் பேரவைச் சட்ட முன்வடிவு எண் 16/1974) கொண்டுவரப்பட்டு, அது பரிசிலனைக்காக அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

இச்சட்ட முன்வடிவை ஏற்று நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

@ 77ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது

1974 ஏப்ரல் 11] *[திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]*

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம் சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

Thiru A. R. DAMODARAN : Sir, on the face of it this seems to be a very simple measure. But, I think, I should take this opportunity of pointing out that it has very dangerous over-tones. Even when this Act was introduced in 1970, I took objection to the levy of surcharge on sales tax collected on various grounds to which I shall refer briefly in my address. First, Sir, the reason given by the Hon. Minister is that since 59 items have been brought under single-point tax, a loss of revenue is expected by the Government and, therefore, to make up this revenue, this surcharge is being increased from 5 to 10 per cent. This is not really borne out by facts if we take note of the sales tax revenue of the Tamil Nadu Government over a period of one decade. Sir, in the Revenue Estimates given for the years 1972–73, 1973–74 and 1974–75, the gross sales-tax revenue, both under the Central Sales Tax Act and under the State Sales Tax Act, amounted to Rs. 115 crores and odd in the year 1972–73; and the revenue estimates for the year 1973–74 come to Rs. 128 crores, accounting for an increase of over Rs. 13 crores within a period of one year. Considering the fact that prices of all commodities have registered an increase, not only because of the rise in manufacturing costs but also because of the rise in excise duties, one can confidently expect that the sales tax revenue of the Tamil Nadu Govarnment even without this measure would be well over Rs. 145 crores for the year 1974–75. In these circumstances, I consider it a very weak argument for the Hon. Minister to state that it is necessary to increase the surtax on sales tax. One of the reasons given is that this is a tax that will be borne by the richer sections of the trading community and that this will not be passed on to the consumers. Sir, I wish to join issue with the Hon. Minister on this cardinal principle whether the additional burden because of the levy of this additional sales tax would not be passed on to the consumer because of the so-called prohibition that is contained in the original Act of 1970. Sir, even at that time, I pointed

out that the State Government had really no powers, either Constitutional or otherwise, to prevent an increase in the price of commodities by putting in a clause in the Tamil Nadu Additional Sales Tax Act of 1970 saying that this shall not be passed on to the consumer. The State Government will have the power to fix the prices of commodities only on a very limited range of products and out of 120 items or 125 items that are brought under the sales tax, I would like to inform the Hon. Minister that he has powers in respect of less than 10 items to control the sale price of the commodities. In 1970 when the price of petroleum products had to be increased because of the additional sales tax, the Oil Companies were asked to pay this additional sales tax and not to pass this on to the consumers of petroleum products. I think that even the Hon. Minister will accept that this has not been borne out by facts and that only 3 or 4 months later, the Oil Companies increased the price of all petroleum products, of course, not putting in their bills as additional sales tax, but as an increase in the price of the commodity itself.

(பிற்பகல் 5-40)

Sir, I refer to the fact that there are over 110 commodities, and I would like the Hon. Minister to kindly elucidate whether the power he has given in this Bill is illusory or merely a sort of moral obligation on business houses not to increase the prices of their commodities. For example, I would like him to tell us whether he can control the prices of typewriters, tabulating machines, calculating machines and duplicating machines, on which we levy a sales tax and on which obviously an additional surtax would be levied. There are motor vehicles batteries, refrigerators, wireless reception instruments and apparatuses, radios and radio-gramophones, electric valves, cinematographic equipment, photographic and other cameras—in fact, I have to single out one or two items only where the State Government really have the power to impose price-control and see that this burden is not passed on to the consumer. Therefore, the argument that this is going to be paid by the 4,000 rich traders in Tamil Nadu is entirely without foundation or basis and the Government will have to reconcile themselves to the fact that this so-called surtax is really an increase in the basic sales tax on all these commodities and the entire

burden, at least 95 per cent of the burden of this tax is going to be passed on to the consumer.

Sir, I now come to the second Constitutional difficulty in the State Government trying to prevent traders from passing on this tax to the consumers. Sir, in the Schedule of powers given under the Constitution, sales tax is a State subject and the Government of Tamil Nadu have no power whatsoever to levy a tax on the income of an individual. Even in 1970, I pointed out that this additional surtax was really a tax on the profits made by a commercial concern or an individual and as such it was clearly unconstitutional and not contemplated in the Constitution of India. Article 276 of the Constitution—which is the only clause which could perhaps be quoted by the Hon. Minister in support of his claim that a tax could be levied in these circumstances—reads

" Notwithstanding anything contained in article 246, no law of the Legislature of a State relating to taxes for the benefit of the State or of a municipality, district board, local board or other local authority therein in respect of professions, trades, callings or employments shall be invalid on the ground that it relates to a tax on income ".

Sir, the surtax on Sales Tax, obviously, is not a tax on professions, trades, callings or employments and, therefore, I believe that this would be clearly unconstitutional. Even when the tax was levied in 1970, I understand that a few persons, commercial concerns, took up this matter in the High Court of Judicature, Madras and a decision was given that this tax was a valid tax and that the State had power to levy this tax. Sir, the persons could have gone on appeal to the Supreme Court. They did not choose to do so because they had the option which was actually given to them of increasing the prices of commodities. Not only that; when the incidence of additional tax was only 5 per cent, not many would have decided to go to the extent of going on a Writ to the Supreme Court and spending thousands of rupees and getting an illusory benefit and, therefore, it was not chosen to take this matter to the Supreme Court. The danger now is that when the tax is increased to ten per cent of the sales tax paid,

the incidence will become so heavy that willy-nilly the person will have to go to the Court and find out whether it is constitutionally possible for a State Government to levy a tax on income.

Sir, we must realise that sales tax has increased steadily from the date on which it was introduced, when it was hardly one, two or three per cent. Now, we are levying sales tax at the rate of almost 25 per cent on certain articles like molasses and other preparations. If it is taken into account that 10 per cent of that 25 per cent will have to be paid out of the income that is generated from the trade, one can readily realise that it will constitute a great burden on the businessman, if he is not expected to pass it on to the consumer and if he is expected to pay it out of his profits. Therefore, I believe that in raising the surtax from 5 per cent to 10 per cent, the Tamil Nadu Government are endangering the very principle of the Bill that was introduced in 1970, that it is inviting litigation and by so doing there is the possibility of the entire Act being struck down as unconstitutional. Sir, I would prefer that this cancerous growth of sales tax is not resorted to. Especially, in the year 1974, when the Hon. Ministers have been promising us that everything would be rationalised, to continue a surtax and a surcharge on sales tax is not really rationalisation, but it is merely promoting further complications in the administration of the Act. Although from the point of view of revenue, the Hon. Minister may feel that he could gain an additional Rs. 2 or 3 crores, I am afraid that in actual practice this will not only constitute a heavy burden on the consumer and more that, after having passed on the price to the consumer, the commercial firms or the business may also get the additional relief of having this Act declared null and void, with the result that the benefit would neither accrue to the consumer nor to the Government but would fill the pockets of individual enterprises. I would, therefore, plead that fresh rethinking should be done on this issue. In fact, even in the Budget Speech, I appealed to the Hon. the Chief Minister to consider the constitutional validity of this Bill. Even if he is convinced that there are some grounds for considering it to be constitutionally valid, I would appeal to him to consider further the inability of the State Government to exercise price-control on 95 per cent of the commodities that come under the sales tax and to realise that what has been

originally contemplated in the Bill is only a homily and that it cannot act as a legal compulsion on traders. Even on this ground, Sir, I feel that this is a heavy burden on the business community and the consumers. I would, therefore, urge that this Bill be dropped and that the topic be further investigated and if necessary, we should study its implications before venturing to pass it, in haste, in this House. Thank you.

திரு. கே. ராஜாராம்: மாண்புமிக்க துணைத் தலைவரவர்களே, இந்தத் திருத்தச் சட்டம் 1970 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட 14-வது சட்டத்தில் கண்டுள்ள 2, 3 ஆகிய பிரிவுகளைத் திருத்துவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. அதில் இரண்டாவது பிரிவு பொது விற்பனை வரியைப் பொறுத்த விஷயம். 3-வது பிரிவு, பெட்ரோல் மற்றும் அது சம்பந்தப்பட்ட எண்ணெய் பொருள்களைப்பற்றிய விஷயம். இவை இரண்டுக்கும் விற்பனை வரியின் பேரில் 5 சதவீதம் அதிகப்படியாக, அடிஷனல் டேக்ஸ் என்று விதிப்பதற்காக, முன்னால் மசோதா கொண்டு வந்தபோதே, நாங்கள் அதை எதிர்த்தோம். அப்பொழுது அரசாங்கத்தின் சார்பில், அந்த வரி கன்ஸ்யூமர் தலையில் தள்ளப் படமாட்டாது, கன்ஸ்யூமரிடமிருந்து வசூல் செய்யப்பட மாட்டாது என்று சொல்லப்பட்டது. ஆனால், நடைமுறையில் அப்படி இல்லை. வியாபாரிகள் விற்கும் அந்தச் சரக்கின் விலையையே ஏற்றிவிடுகிறார்கள். நண்பர் திரு. ஏ. ஆர். தாமோதரன் போன்ற எண்ணெய் வியாபாரிகள் வேண்டுமானால் அவ்வாறு விலையை ஏற்ற முடியாது. ஏனெனில், பெட்ரோலின் விலையை விட்டருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து விடுகிறார்கள். அதன் பேரில்தான் அவர்கள் வரி செலுத்த வேண்டும். அவர்கள் வாங்கி உபயோகிப்போர் தலையில் தள்ள முடியாது. மற்ற எண்ணெய்ப் பொருள்களை விற்கின்றவர்கள் அந்த வரியை கன்ஸ்யூமர்கள் தலையில்தான் தள்ளுவார்கள். அந்த வகையில் விலையை ஏற்றி விடுவார்கள்.

(பிற்பகல் 5-50)

இதை யாரும் தடுக்க முடியாது. இன்றைக்கு என்ன நடக்கிறது என்றால் 'செட்டி நட்டம் குடியிலே' என்று சொல்லுவார்கள். அந்த மாதிரி அரசாங்கம் வசூலிக்கின்ற அதிகப்படியான வரியை குடிமக்கள் பேரில், பொருள்கள் பேரில் விலையேற்றி வசூலிக்கிறார்கள். இதை யாரும் இல்லையென்று சொல்ல முடியாது. மக்களிடத்தில் வசூலிக்கவில்லை; 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் செய்கிற வியாபாரிகளிடத்தில் மட்டும்தான் வசூலிக்கப்படுகிறது என்று சொன்னால், நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போன்ற நிலைமைதான்

இருக்கும். ஏனென்றால், சட்டபூர்வமாக அப்படி இருக்கலாம். அவர்களுடைய பேரேடுக் குறிப்பில் கணக்கு எழுதித்தான் செலுத்துகிறார்கள். ஆனால், சரக்கின் பேரில் விலையை ஏற்றிவிடுகிறார்கள். அது போதாது என்று இப்போது வரியை 10 சதவிகிதமாக்குகிறோம். அதனால் விலை இன்னும் அதிகமாகிறது. அரசாங்கம் இதற்கு என்ன காரணம் சொல்கிறதென்றால், இதற்கு முன்னால் 25,000 ரூபாய் வரை டர்னோவர் இருந்தவர்களுக்கு விதிவிலக்கு அளித்திருந்தோம், இப்போது 50,000 ரூபாய் வரை டர்னோவர் இருப்பவர்களுக்கு விதிவிலக்கு அளிப்பதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடுசெய்ய இந்த அதிகப்படி வரியை விதிக்கின்றோம், 5 சதவிகிதத்திலிருந்து 10 சதவிகிதம் ஆக்குகின்றோம் என்று சொல்கிறார்கள். இது 'நாசூரல்'. ஐந்து வருடங்களுக்கு முன்னால் எவ்வளவு சரக்கு 25,000 ரூபாய்க்கு ஒருவர் விற்றாரோ, அதே சரக்கு இன்றைக்கு 50,000 ரூபாய்க்கு விற்கிறது. எந்தக் கடைக்குப் போனாலும் எல்லாப் பொருட்களின் விலையும் இரண்டு மடங்கு, மூன்று மடங்காகிவிட்டது. 25,000 ரூபாய்க்கு எவ்வளவு சரக்கு ஒருவன் விற்றானோ, அவ்வளவு சரக்குதான் இப்போது 50,000 ரூபாய்க்கு விற்றுக்கொண்டிருக்கிறான். இது அதிகப்படி ஆவதால், அதற்காக இந்த வரியைக் கூட்டுகிறோம் என்று சொல்வது சரியல்ல. இது அவ்வளவும் விலை ஏற்றத்தால் அவதிப்படுகிற மக்கள் தலையில் தான் போய் விழுகிறது. அதிலிருந்து நிவாரணம் அளிக்கவில்லை. நிவாரணம் அளிப்பதாகவும் 10 லட்சம் ரூபாய்க்கு மேல் தொழில் செய்கிற 4,000 அல்லது 5,000 வியாபாரிகளிடத்தில் வசூலிக்கிறோம் என்றும் சொல்வது சரியல்ல. ஆகையால், 5 சதவிகிதம் என்பதை 10 சதவிகிதமாகக் கூட்டுவதைக் கைவிட வேண்டும் என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்களும் இந்த மசோதாவின் பேரில் தங்களுடைய கருத்துக்களைச் சொன்னார்கள். கருத்துக்களைச் சொல்லும்போது, விற்பனை வரி 5 சதவிகிதம் என்று போடப்பட்டிருப்பதை 10 சதவிகிதம் என்று கூடுதலாக்குவது சரியல்ல என்ற வார்த்தை வைத்தார்கள். பொருட்களின் மீது வரி விதிக்கின்ற மசோதா அல்ல இது. 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் செய்கிற வியாபாரி மீது 5 சதவிகிதம் அடிஷனல் சேல்ஸ் டாக்சாகப் போடப்பட்டு வந்ததை, இப்போது 10 சதவிகிதமாக அதிகரிக்கத்தான் இந்த மசோதா கொண்டுவரப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனைவரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974)

1974 ஏப்ரல் 11] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் விலைவாசியைக் கட்டுப்படுத்து கின்ற அதிகாரம் மாநில அரசிற்கில்லை; மத்திய அரசாங்கத்திற்குத்தான் இருக்கிறது; விலைவாசி உயர்வை மாநில அரசு தடுக்கமுடியாத சூழ்நிலையில் அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் போடுவது சரியல்ல என்ற வாதத்தை வைத்தார்கள். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்குத் தான் இருக்கிறது என்று அவர் சொன்னதற்கு நன்றி தெரிவித்துக் கொள்வதோடு, அதை நான் முழுவதும் வரவேற்கிறேன். மத்திய அரசு அந்தக் கடமையைச் செய்யவேண்டும். விலைவாசியைக் கட்டுப்படுத்த வேண்டிய கடமை அவர்களுக்கு உண்டு. நமது மசோதாவைப் பொறுத்தவரையில், இந்த வரி போடுவதால், இது வாங்குகிறவர்கள் மீது மாற்றப்படும் என்று சொன்ன கருத்தை ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். 10 லட்சம் ரூபாய்க்கு மேல் டர்னோவர் இருக்கிற வியாபாரிகள் மீது போடப்படும் 5 சதவிகித வரி, இப்போது 10 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னது போல, விலைவாசி ஏறிக்கொண்டுபோனால், டர்னோவர் அதிகமாகும். விலையில் இந்த டாக்சைச் சேர்த்து, விலைவாசி மேலும் உயர்ந்தால், அதன் விளைவாக டர்னோவர் அதிகமாகி, வியாபாரிகள் வரி அதிகமாகக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்படுமே தவிர அதனால் அவர்கள் பலனடைய முடியும் என்று நான் நம்பவில்லை. எனவே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே நான் முன்னுரையில் சொன்னதுபோல, 2 கோடி ரூபாய், இப்போது இந்தச் சலுகைகள் கொடுப்பதன் மூலம் அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. இந்த இழப்பு ஈடுசெய்யப்பட வேண்டும். மற்றொன்று, சாதாரண வியாபாரிகளுக்குச் சலுகைகள் அளித்திருக்கிறோம். ரூ. 10 லட்சத்திற்கு மேல் டர்னோவர் இருப்பவர்கள் சாதாரண வியாபாரிகள் என்று சொல்வதற்கில்லை. எனவே, இந்த அரசு 5 சதவிகிதம் என்றிருந்ததை 10 சதவிகிதம் என்று ஆக்க இந்த மசோதாவைக் கொண்டுவந்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அரசியல் சட்டப் பிரச்சினையைக் கிளப்பினார்கள். ஐந்து சதவிகிதம் போட்டதால் ஐக்கோர்ட்டோடு நின்றுவிட்டார்கள், 10 சதவிகிதம் போட்டால் சுப்ரீம் கோர்ட்டு வரையில் போவார்கள் என்று சொன்னார்கள். இப்போதே போயிருக்கிறார்கள். சுதர்சன் இண்டஸ்ட்ரீஸ் எட்ஸெடிரா கேசில் ஐக்கோர்ட்டு நமக்குச் சாதகமாக தீர்ப்புக் கொடுத்து, அதன் பேரில் சுப்ரீம் கோர்ட்டில் அப்பீல் செய்யப்பட்டு, அங்கே ஆர்குமெண்ட்ஸ் முடிந்திருக்கிறது. ஜட்ஜ்மெண்ட் ரிசர்வ் செய்திருக்கிறார்கள். அந்த ஜட்ஜ்மெண்டும் எங்களுக்குச் சாதகமாகக் கிடைக்கும்

என்ற நம்பிக்கையோடுதான் அரசாங்கம் வழக்கை நடத்தியிருக்கிறது. எந்த வழக்கு மன்றத்திற்குச் சென்றாலும், எந்தக் கட்சிக்காரனும் தன்னுடைய வழக்கு தோற்றுவிடும் என்று சொல்லமாட்டான். அவருக்கு ஆஜராகிற வக்கீல் கூட, இங்கே இல்லாவிட்டால், இன்னொரு கோர்ட்டில் பார்ப்போம் என்று சொல்வார்களே தவிர, வழக்கு தோற்கும் என்று யாரும் சொல்ல மாட்டார்கள். எங்களுக்கும் மிகுந்த நம்பிக்கையிருக்கிறது. இந்த வழக்கில் வெற்றிபெறுவோம்; அரசாங்கம் போட்டிருக்கின்ற அடிஷனல் சேல்ஸ் டாக்ஸ் சுப்ரீம் கோர்ட்டால் ஏற்றுக்கொள்ளப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்களும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சொன்ன கருத்துக்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொண்டு, இந்த மசோதாவை நிறைவேற்றித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவையின் முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ் நாடு 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 16/74) பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

சட்டமுன்வடிவு பரிந்துரை செய்வதற்காக ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

பரிந்துரை ஏதுமில்லை.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே,

"சட்டப்பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/74) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

என்று முன் மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர்: அவை முன் உள்ள பிரச்சினை—

"சட்டப் பேரவையால் நிறைவேற்றப்பட்ட, தமிழ்நாடு, 1974-ஆம் ஆண்டு, கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1974) திருப்பி அனுப்பப்பட வேண்டும்."

தீர்மானம், அவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.